Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. **CC No.135/2023**
**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : திரு.பாலசந்திரன் |
| Father/Husband Name | : திரு. குருசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது புதுப்பட்டினத்தில் குடியிருந்து ஒப்பந்த தொழிலாளராக வேலை செய்து வருகிறேன். சாட்சி சுப்பிரமணி என்னுடைய அண்ணன் ஆவார். கடந்த 25.01.2023ம் தேதி இரவு 9.30 மணியளவில் எனது அண்ணன் மற்றும் அவருடைய நண்பரான அழகுசுப்பு என்பவரும் சாப்பிடுவதற்காக புதுப்பட்டினம் மார்க்கெட் கேட் அருகில் உள்ள ஓட்டலில் சாப்பிடுவதற்காக சென்றபோது அங்கு கும்பலாக இருந்தார்கள். அந்த கும்பலில் யாரோ என் அண்ணனையும் அவரது நண்பரையும் பார்த்து அசிங்கமாக பேசி கட்டையால் என் அண்ணனையும் அவரது நண்பரையும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள். மேலும் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது. எனது அண்ணனும் அவரது நண்பரும் ரத்த காயத்துடன் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களை டி.ஏ.இ.

மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். அன்றைய தினமே காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. அந்த புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. (**புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>**

கடந்த 25.01.2023 அன்று இரவு 9.30 மணியளவில் புதுப்பட்டினம் மார்க்கெட் கேட் அருகில் உள்ள மூன் பாஸ்ட் புட் உணவகத்தில் சாப்பிடுவதற்காக எனது அண்ணனும் அவரது நண்பரும் சென்றிருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது அந்த ஓட்டலில் வேலை பார்க்கும் மாலிக் என்பவர் எனது அண்ணனையும் அவரது நண்பரையும் பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அவரது கையில் வைத்திருந்த கட்டையால் எனது அண்ணனை தலையில் தாக்கினார் என்றால் சரியல்ல. எனது அண்ணன் நண்பரையும் கட்டையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் அவர்களை பார்த்து கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. மேலே சொன்ன விவரங்களை புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. **CC No.135/2023**
**P.W**.2 (LW2)

Name : திரு.சுப்பிரமணி
Father/Husband Name : திரு. குருசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது புதுப்பட்டினத்தில் குடியிருந்து எலக்ட்ரிஷியனாக வேலை செய்து வருகிறேன். சாட்சி பாலசந்திரன் என்னுடைய தம்பி ஆவார். அழகுசுப்பு என்னுடைய நண்பர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 25.01.2023ம் தேதி இரவு 9.30 மணியளவில் நானும், என்னுடைய நண்பரான அழகுசுப்பு என்பவரும் சாப்பிடுவதற்காக புதுப்பட்டினம் மார்க்கெட் கேட் அருகில் உள்ள ஓட்டலில் சாப்பிடுவதற்காக சென்றபோது அங்கு கும்பலாக இருந்தார்கள். அந்த கும்பலில் யாரோ என்னையும் எனது நண்பரையும் பார்த்து அசிங்கமாக பேசி கட்டையால் என்னையும் எனது நண்பரையும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள். மேலும் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது. எங்களுக்கு டி.ஏ.இ. மருத்துவமனையில் முதல் உதவி

சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 25.01.2023 அன்று இரவு 9.30 மணியளவில் புதுப்பட்டினம் மார்க்கெட் கேட் அருகில் உள்ள மூன் பாஸ்ட் புட் உணவகத்தில் சாப்பிடுவதற்காக நானும் எனது நண்பரும் சென்றிருந்தோம் என்றால் சரிதான். அப்போது அந்த ஓட்டலில் வேலை பார்க்கும் மாலிக் என்பவர் என்னையும் எனது நண்பரையும் பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அவரது கையில் வைத்திருந்த கட்டையால் என் தலையில் தாக்கினார் என்றால் சரியல்ல. எனது நண்பரையும் கட்டையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் எங்களை பார்த்து கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. மேலே சொன்ன விவரங்களை போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.